Registered as a Newspaper    பக்கங்கள் 4    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

The Eelanaatham    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    வைகாசி 12    26 - 05 - 1994    வியாழக்கிழமை    ஓசை 97

## தேசப்பற்றை ஏற்படுத்தும் வகையில் மாணவர் எழுச்சிநாளுக்கு ஏற்பாடு

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் அடுத்த மாதம் 5ஆம் திகதி வடதமிழீழமெங்கும் மிகவும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவிருக்கிறது; மாணவ சமுதாயத்தை சமூகத்துக்கு ஏற்றவகையில் உருவாக்குவதற்கும், மாணவர்கள் மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் இம் மாணவர் எழுச்சி நாள் அனுஷ்டிக்கப்படவிருப்பதாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. இன்பன் தெரிவித்தார்; விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் நடுவப்பணியகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். இச்சந்திப்பின்போது அவர் (4ஆம்பக்கம்பார்க்க)

# எதிர்கால சிற்பிகளான இளம் தலைமுறை ஆற்றல் மிக்கதாக உருவாக வேண்டும்

## தலைவர் பிரபாகரனின் அவா இதுவே


**"எமது நாட்டின் எதிர்கால சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரையை உருவாக்க வேண்டும் என்பதே எனது அவா. அறிவியல் ஆற்றல்மிக்கவர்களாக, தேசத்தில் பற்றுக்கொண்டவராக, நேர்மையும், கண்ணியமும், வீரமும், மானமும் உள்ளவர்களாக, போர்க்குணம் மிக்கவர்களாக இந்தப் புதிய பரம்பரை உருவாக வேண்டும்" இவ்வாறு தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் 'வெளிச்சம்' வெள்ளி இதழுக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார்,**

அப் பேட்டியினை முழுமையாக இங்கு தருகிறோம்.

கேள்வி; இளம் பராயத்திலிருந்தே தாங்கள் பல்வேறு நூல்களை வாசித்து வருகின்றீர்கள். உங்களுக்குள் தமிழ்த் தேசிய உணர்வையும், ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டக் குணாம்சத்தையும் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருந்த நூல்களைப்பற்றி விபரித்துக் கூறமுடியுமா?

பதில்: சின்ன வயதிலிருந்தே நானொரு புத்தகப் பிரியன். எனது இளம் பராயத்தில் அதிக பொழுதுகள் நல்ல நூல்களுடனேயே கழிந்தன. அதிலும் சரித்திர நாவல்களையும், வரலாற்று நூல்களையும், வீரபுருஷர்களின் வாழ்க்கைச் சரிதங்களையுமே நான் விரும்பிப் படித்தேன். கைச் செலவுக்காக என் வீட்டார் எனக்கு வழங்கிய பணத்தையெல்லாம் புத்தகங்கள் வாங்குவதிலேயே செலவிட்டேன்; புதியபுதிய நூல்களை வாங்கிப் படிப்பதில் எனக்குத் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. எனது ஊரில் ஒரு புத்தகக்கடை இருந்தது. அங்கிருந்த அரிய நூல்களை எல்லாம் எப்படியும் வாங்கி வாசித்துவிடுவது எனது வழக்கமாக இருந்தது அலெக்சாண்டர், நெப்போலியன் போன்றவர்களின் வீர வரலாற்றை இப்படியான நூல்களின் மூலமே நான் அறிந்துகொண்டேன். இந்திய விடுதலைப் போராட்டத்தையும், அதற்குத் தங்களையே தற்கொடையாக்கிய சுபாஸ் சந்திரபோஸ்,

(3ஆம் பக்கம் பார்க்க)



## தேசிய பட்டியல் எம்.பிக்கு தொலைபேசி மூலம் கொலை மிரட்டல்

(கொழும்பு)

பதவியைத் துறவுங்கள் அல்லது கொலை செய்யப்படுவீர்கள் என்று தமதுகுடும்பத்தினருக்கு அநாமதேய தொலைபேசி அழைப்புக்கள் மூலம் எச்சரிக்கை விடப்பட்டு வருவதாக தேசிய பட்டியல் மூலம் தெரிவான பாராளுமன்ற உறுப்பினரான காலிங்க ஓபயவன்ச கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை முதல் அநாமதேயமான முரட்டு ஆண்குரலொன்று தொலைபேசி மூலம் கொச்சைத்தனமான வார்த்தைகளால் இத்தகைய மிரட்டலை விடுத்து வருவதாகவும், எனினும் பதவி துறக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்பதையும், இத்தகைய மிரட்டல்களுக்கு பணியப் போவதில்லை என்பதையும் தமக்கு நெருக்கமானவர்களிடம் எடுத்துரைத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஞாயிற்றுக் கிழமைக்கிடையில் ஆறு தடவை இத்தகைய மிரட்டல்கள் கிடைத்த போதும் தாம் அஞ்சவில்லை என்று ஓபயவன்ச மேலும் தெரிவித்தார். இத்தகைய மிரட்டல்கள் தமக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. மோதலில் கைப்பற்றப்பட்டவை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 22ம் திகதி அதிகாலை 4 30 மணியளவில் அனுரபுரவிபுல்தமண என்றஇடத்தில் பொலிஸ் காவலரண் ஒன்றிலிருந்த பொலிசாருடன் ஏற்பட்ட திடீர் மோதலின்போது இரு பொலிசார் கொல்லப்பட்டனர் இவர்களிடமிருந்து இராணுவப் பொருள்கள் மீட்கப்பட்டன. இத் தாக்குதலின் போது புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

இத் தாக்குதலின் போது;

- சப்ளை கோள்சர் - 05
- தண்ணீர் கான் - 05
- கிற்பாக் - 05
- கெல்மெட் - 03

என்பன விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டன.

## திருமலை தாக்குதலில் நவீன ஆயுதம் மீட்பு

தன. அதிலும் சரித்திர நாவல்களையும், வரலாற்று நூல்களையும், வீரபுருஷர்களின் வாழ்க்கைச் சரிதங்களையுமே நான் விரும்பிப் படித்தேன்.

டேன். இந்திய விடுதலைப் போராட்டத்தையும், அதற்குத் தங்களையே தற்கொடையாக்கிய சுபாஸ் சந்திரபோஸ்,

(3 ஆம் பக்கம் பார்க்க)



கப்பட்டன. இத் தாக்குதலின் போது புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

இத் தாக்குதலின் போது:
ஃ நடுத்தர ரவைகள்- 315
ஃ ரி- 56 ரவைக் கூடு- 03
ஃ கைக்குண்டு -01
ஃ ஏ. கே, கோள் சர்- 01

## நவீன ஆயுதம் மீட்பு

திருகோணமலை மாவட்டம் கிந்திலூத்துக்கும் அலூத்தோயாவிற்குமிடையில் ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் காலை 6-25 மணியளவில் புலிகள் நடத்திய தாக்குதலின் போது ரி-56 ரக ஆயுதம் ஒன்று விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது,

இத்தாக்குதலின் போது இரு படையினர் பலியாகியதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டமை தெரிந்ததே,

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை

# புதிய விமானங்கள் தேவையில்லை இருப்பதை பயன்படுத்தினால் போதும்

## விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

''சிறிலங்கா விமானப்படைக்குத் தற்போது தேவையானது புதிய விமானங்கள் அல்ல இருக்கும் விமானங்களின் அதிஉயர் சேவையை பெறுவது தான்'' என விமானப்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

சென்ற சில மாதங்களுக்கு முன்னர் பதவியேற்ற இவ் விமானப்படை தளபதியிடம் தற்போதைய புதிய விமானக் கொள்வனவு தொடர்பாக கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தற்போதுள்ள விமானங்கள் தாராளமாக போதுமானவை என்றும் எனவே விமானக் கொள்வனவு தற்போதைக்கு தேவை இல்லை எனவும் கூறினார்.

## குடும்ப அட்டை செயலகம் மூடப்பட்டிருக்கும்

இன்று தொடக்கம் எதிர்வரும் 04. 06. 94 சனிக்கிழமை வரை சகல குடும்ப அட்டைப் பகுதிச் செயலகங்களும் திறக்கப்படமாட்டாது என்பதை பொது மக்களின் கவனத்திற்கு குடும்ப அட்டைப் பகுதியினர் அறியத் தருகின்றனர்.

## பயிற்சிப்பட்டதாரிகளுக்கு சம்பளம் அதிகரிக்கும்

1971-ம் ஆண்டுக்கு பின்னர் பயிற்சிப் பட்டதாரிகள் திட்டத்திற்கமைய சேர்த்துக் கொள்ளப்பட்ட பயிற்சிபட்டதாரிகள் அனைவருக்கும் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது

பொருத்தமான தொழில் வாய்ப்புபெறும் வரையில் இச் சம்பளம் வழங்கப்படும், இதன்படி வருடமொன்றிற்கு 45,120 ரூபாவிற்கு பதிலாக 49,200 ரூபாவை அவர்கள் சம்பளமாக பெறுவர். இதன்படி அவர்களுக்கு வருடமொன்றிற்கு 4080 ரூபா கூடுதலாக கிடைக்கிறது.

1971க்கு முன்னர் திட்ட அமுலாக்கல் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு சமமான பதவியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளும் 1971க்கும் 1977க்கும் இடையில் பயிற்சிபட்டதாரி திட்டத்திற்கு புறம்பாக சேர்க்கப்பட்டவர்களும் இதில் நன்மை பெறுவர். 1971க்கு பின்

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பதவியிலிருந்தும் கூரே விரைவில் நீக்கம்

[கொழும்பு]

விரைவில் ஏற்படவிருக்கும் அமைச்சரவை மாற்றத்தின் போது வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சரான சிறிசேன கூரே நீக்கப்பட்டு அவரது இடத்திற்கு இராஜாங்க அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் நியமனம் செய்யப்படவுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் முடிவடைந்து இருப்பதாகவும் இம் மாற்றம் பெரும்பாலும் உறுதியாகி விட்டதாகவும் 'ராவய' பத்திரிகை தெரிவிக்கிறது.

## பெறுபேறுகள் இன்று வரும்

(நல்லூர்)

யாழ். பல்கலைக்கழக சிறப்புக் கலை இறுதியாண்டு வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ இறுதியாண்டுப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று வெளிவரவுள்ளன.

கடந்த வியாழக்கிழமை பொதுக் கலை இரண்டு பெறுபேறுகளும், இறுதிப் பெறுபேறுகளும் வெளிவந்தமை தெரிந்ததே.

## மணற்காட்டுப்பகுதியில் விமானக் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மணற்காடு பகுதியில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதலில் ஈடுபட்டதாகத் தெரியவருகின்றது.

நேற்றிரவு இடம் பெற்றதாகச் சொல்லப்படும் இந்த விமானக் குண்டுவீச்சு தாக்குதலின் போது ஏற்பட்ட சேத விபரங்கள் அறியப்படவில்லை;

# 'வெஸ்ட்மினிஸ்டர்' முறை; காமினி ஆதரிக்கின்றார்

[கொழும்பு]

பாராளுமன்றத்திற்கு பிரதிநிதிகளை தெரிவுசெய்வதிலும் ஜனாதிபதியை தெரிவு செய்வதிலும் முன்னைய ''வெஸ்ட்மினிஸ்டர்'' முறை கடைப்பிடிக்கப்படுவதைத் தான் ஆதரிப்பதாக காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்.

தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் பெற்ற அவர் 'திவயின' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் மேலும் தெரிவிக்கையில்:

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. மாணவர்களின் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(நல்லூர்)

பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் தாமதமாக வெளிவருவது தொடர்பாக விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வந்த கலைப்பீட மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டனர்.

கடந்த 23 ஆம் திகதி மாலை எழுத்து மூலம் கொடுத்த உறுதி மொழியைத் தொடர்ந்தே மாணவர்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டதாக கலைப் பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார், இன்று அவர்கள் விரிவுரைகளில் கலந்து கொள்வார்கள்.

கலைப்பீடப் பீடாதிபதிக்கும் கலைப்பீட ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இம் மாதம் 15ஆம் திகதி நடந்த பேச்சுவார்த்தைகளில் எடுத்த முடிவுகளை எழுத்தில் தரும் வரை கலைப்பீட மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வந்தனர்,

பேச்சுவார்த்தைகளில் ஒன்றியத்தின் கோரிக்கைகளில் இரண்டினைக் கலைப் பீடா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சந்திரிகாவை கொல்ல 'களுமல்லி'; பாதுகாப்பிற்கு 8 அதிரடிப்படை தேவை

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் துணைத் தலைவி சந்திரிகா குமாரணதுங்காவை கொலை செய்வதற்காக கடவத்தையைச் சேர்ந்த ''களுமல்லி'' என்பவரைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இக் ''களுமல்லி'' எனப்படும் இந்த நபர் சொத்தி உபாலியைப்போன்ற பாரதூரமான கிரிமினல் எனவும் பிரபல அரசியல் வாதியொருவரின் செல்லப்பிள்ளை எனவும் 'யுக்திய' பத்திரிகை கூறுகிறது.

கொழும்பில் சந்திரிகா குமாரணதுங்காவின் நடவடிக்கைகளை களுமல்லி அவதானித்து வருவதாகவும் அவர் கலந்துகொள்ளும் கூட்டங்களில் களுமல்லி இரகசியமான முறையில் கலந்து கொண்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை சந்திரிகா குமாரணதுங்காவின் பாதுகாப்புக் குறித்து அவரின் பாதுகாப்பு அதிகாரிகள் மத்தியில் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது, அப்போது சந்திரிகாவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது, இதனையடுத்து சந்திரிகா குமாரணதுங்காவிற்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் இதற்கென ஆக குறைந்தது

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார்? ஜூன் 11 இல் தெரியவரும்

[கொழும்பு]

எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் போட்டியிடுவது தொடர்பாக விரைவில் முடிவெடுக்கப்படும் என அதன் தலைவர் ஜீ. எம். பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்;

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**காவேரி சியாக்காய் பவுடர்**

சம்போ தடைசெய்யப்பட்டது என்ற கவலை வேண்டாம். இருக்கவே இருக்கிறது காவேரி சியாக்காய் பவுடர். நுரை வளம் கொண்டது. சியாக்காய் பவுடர் என்று கேட்காதீர்கள், காவேரி சியாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். (8369)


## போட்டி

யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியின் வருடாந்த 'இல்ல மெய்வல்லுநர் போட்டி' நாளை வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபரின் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ்-நல்லூர் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் கலந்து கொள்வார். (22)

# ஆரம்பக்கல்வியை அரசு திட்டமிட்டு நசுக்குகின்றது

**-சென்ஜேம்ஸ் வித்தியாலய அதிபர்**

(நல்லூர்)

வடக்குக் கிழக்கில் அரசாங்கப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய ஆசிரியர்களைப் போதியளவு அரசு வழங்காமல் இழுத்தடிப்புச் செய்கின்றது. மேலும் ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்களின் அறிவு விருத்திக்கான உபகரணங்களை வழங்காமலும் அரசு இழுத்தடிப்பு வேலைகளைச் செய்கின்றது. ஆனால் சிங்களப் பகுதிகளில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளுக்கு போதியளவு ஆசிரியர்களையும் பாடசாலை உபகரணங்களையும் அரசு வழங்கி அவர்களது ஆரம்பக் கல்விக்கு உறுதுணையாக உள்ளது. அரசின் இப்பாரபட்சம் காரணமாக தமிழ் மாணவர்களின் கல்வி பாதிப்புக்குள்ளாகிறது என யாழ் சென்ஜேம்ஸ் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றும்போது யாழ் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். ஸ்ரனிஸ்லோஸ் தெரிவித்தார்.

யாழ். சென்ஜேம்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் அண்மையில் யாழ் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் அ. அகஸ்ரின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது, பாடசாலையின் வளர்ச்சியில் உறுதுணையாக இருக்க வேண்டியவர்கள் பழைய மாணவர்களாவர். ஆசிரியர்கள், அதிபர்கள் வருவார்கள் போவார்கள். ஆனால் பழைய மாணவர்கள் என்றும் பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பவர்கள். எமது பாடசாலையில் ஆசிரியப் பற்றாக்குறை அதிகம் உள்ளது. பதின்மூன்று ஆசிரியர்கள் வசதிக் கட்டணத்திலேயே எதுவித சம்பளக் கொடுப்பனவுகளும் இன்றி கல்வியைப் புகட்டி வருகின்றார்கள். வெளிநாடுகளில் குறிப்பாக ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளில் ஆரம்பக் கல்வியைப் போதிப்பதற்காக பல செயற் திட்டங்களை அந்நாட்டரசாங்கங்கள் செய்து வருகின்றன. வைத்தியர்கள் கல்வியில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்களுடன் சேர்ந்து அவர்களுக்கு கல்வியைப் புகட்டி வருகிறார்கள். இதனால் அவர்களது ஆரம்பக் கல்வி அபிவிருத்தியடைகிறது. இதே நிலை சிங்கள சிறிலங்காவிலும் அரசினால் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது ஆனால் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மாணவர்களின் கல்வியை அழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக செயற்படுகிறது என்றார்.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம் பெற்றது. (17)

## பயணிகளுடன் நரோமா

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை துறைமுகத்தில் இருந்து பயணிகளுடன் 'நரோமா' கப்பல் இன்று நண்பகல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக யாழ் அரச அதிபர் நேற்று மாலை தெரிவித்தார்.

பருத்தித்துறை துறைமுகம் வந்துசேரும் 'நரோமா' கப்பல் இன்று மாலையே பயணிகளுடனும் மற்றும் யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற மாணவ தாதிகளை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையின் விடைத்தாள்கள் மற்றும் முதன்மை ஆசிரியர்களுக்கான பரீட்சை விடைத்தாள்கள் என்பனவற்றை ஏற்றிக் கொண்டு திருக்கோணமலை நோக்கிப் புறப்பட்டுச் செல்லுமெனத் தெரிவிக்கப்பட்டது.

(பா)

## சுற்றுலா பயணம்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதிகளை நோக்கி உள்ளூர் சுற்றுலாப் பயணிகளின் வருகை தினம் தினம் அதிகரித்துள்ளது.

இப்பகுதிக்கு வருகின்ற சுற்றுலாப்பயணிகள் பருத்தித்துறை துறைமுகம், முனை வெளிச்சவீடு, வல்லிபுரக் கோயில், ஓராம்கட்டையில் உள்ள மேஜர் ரஞ்சன் சித்தப்பா சிறுவர் பூங்கா, வல்வெட்டித்துறையில் திருவில் மற்றும் பகுதிகளைப் பார்வையிடுவதோடு புகைப்படமும் எடுத்துச் செல்கின்றனர்.

நாளொன்றுக்கு பத்துக்கு மேற்பட்ட சுற்றுலாப்பயணிகள் பஸ்கள் வருவது குறிப்பிடத்தக்கது. (யோ)

## பயிற்சியும் கலந்துரையாடலும்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் கால்நடைத் திணைக்களத்துடன் இணைந்து பரவலாக நடாத்தப்பட்டு வரும் கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சியும் கலந்துரையாடலும் கடந்த 11-ம், 12-ம், 13 ம் திகதிகளில் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் நடைபெற்றது.

இப் பயிற்சி வகுப்பில் பெருமளவு பொதுமக்களும் உயர் வகுப்பு மாணவர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## நினைவு கூருகின்றோம்... 26.05.1994

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா -வைரவப் புளியங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினரின் திடீர் சோதனையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**ரகுமான்** (அருளம்பலம் இரகுபதி இரணை இலுப்பைக்குளம் - வவுனியா)

தமிழீழக் கடற்பரப்பில் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்

1987ஆம் ஆண்டு யாழ்- கொக்குவில் சிறிலங்கா இராணுவத்தினருக்கெதிரான நடவடிக்கையின்போது ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

**2-ம் லெப். சேது** (நடராசா சிவசேது - 168 | 2, முத்தமிழ் வீதி, கொட்டடி யாழ்)

யாழ் - கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**செட்டி** (கணபதிப்பிள்ளை நந்தகுமார் - மாசியப்பிட்டிச்சந்தி, சண்டிலிப்பாய் - யாழ்)

வடமராட்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது உடுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய-

**கப்டன் வீணன்** (நவீனநாயகம் நாகராசா - நாகர் கோயில், வடமராட்சி கிழக்கு -யாழ்)

**2 ம் லெப் ரஞ்ஜோசினா** (தங்கவடிவேல் சிவகுமாரன் மதவடி, வல்வெட்டித்துறை யாழ்)

**செட்டி** (சுந்தரம் செல்வராசா-இமையாணன் மேற்கு உடுப்பிட்டி -யாழ்)

**ராஜன்** (- சங்கத்தானை, சாவகச்சேரி -யாழ்)

யாழ்- தொண்டமானாற்றில் ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய.

**கப்டன் அலன்** (நடனசிகாமணி பாக்கியலிங்கம்- வல்வெட்டித்துறை யாழ்)

**நரேஷ்** (கணேசரத்தினம் கிருபாகரன் -பிரதான வீதி தொண்டமானாறு யாழ்)

ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின்போது யாழ் வரணிப் பகுதியில் ஏற்பட்ட சமரின்போது வீரச்சாவெய்திய

**2-ம் லெப் நாகேந்திரன்** (-மகேந்திரன்-மடுக்கோயில்- மன்னார்)

வல்வெட்டித்துறை நெடியகாட்டுப் பிள்ளையார் கோயில் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சின்போது கொல்லப்பட்ட 15 பொதுமக்கள்.

தொண்டமானாறு-செருடாவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டுவீச்சின் போது கொல்லப்பட்ட 09 பொதுமக்கள்.

இதே ஆண்டு வீரச்சாவெய்திய,

**கண்ணன்** (பாலசிங்கம்-தம்பலகாமம்-மட்டு)

1990-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மூளைக்காய்ச்சல் நோயினால் எமைப்பிரிந்த,

**நிசாந்தன் -குடா** (வில்வரட்ணம் ஜெயரட்ணம்- -உவர்மலை-திருமலை)

1991-ம் ஆண்டு யாழ்-கட்டுவன் பகுதியில் சிறிலங்காப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் குட்டிரமேஸ்** (தர்மலிங்கம் இரஞ்சன்- அச்சுவேலிதெற்கு-யாழ்)

1992-ம் ஆண்டு திருமலை-மூதூர், பச்சனூர் முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**லெப். தமிழ்மன்னன்-மாதவராசா** (ரத்தினம் சந்திரகுமார்-மூதூர்-திருமலை)

1993-ம் ஆண்டு வவுனியா-பம்பைமடு-கல்வெட்டிக்கிராமத்தில் தேசவிரோத சக்திகள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

## நினைவுடன் 31 நாட்கள்



துணைப்படைவீரர் பகிரதன்


**வெளிவந்துவிட்டது!**

எங்கும் பெற்றுக்கொள்ளலாம்

**எரித்திரியா**

ஒரு நாட்டின் உதயம்



(... வீரகத்தி)

தாயின் மடியினில்: 28 - 10 - 1938

தாயக மண்ணினில்: 26 - 04 - 1994

எவனிற்கும் தெரியாது
ஏனென்று சொல்லாது
எங்கோ போய்வந்தாய்
தேசத்தின் விடிவே
உன்தாகத்தின் வடிவென்று
நாமறிந்த போது......
வேங்கையின் இலட்சியத்தை
வென்றெடுக்க வயதென்ன
துயரென்ன.........
வேறென்ன வேண்டும்

சரணவாய் கிழக்கு,
நெல்லியடி. (8380)

மனைவி, பிள்ளைகள்,
உறவினர், நண்பர்கள்.

---

ஓம் விராட் விஸ்வ பிரமனே நம:

## யாழ் மாவட்ட நகைத் தொழிலாளர்களுக்கான

# அறிவித்தல்

அன்புடையீர்,

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர் வரும் 4.6.1994 சனிக்கிழமை பி பகல் 2 மணிக்கு, யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அனைத்து நகைத்தொழிலாளர்களும் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்வதோடு, இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை உறுப்பினர்கள் கலந்து கருத்துரையாற்ற உள்ளனர் என்பதையும் அறியத்தருகின்றோம்.

நன்றி

தலைவர் — செயலாளர்

**யா. மா. நகைத்தொழிலாளர் சங்கம்**

(சி-9511)

---



★ எரித்திரிய நாட்டின் விடுதலைக்காக 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

★ நேரடி யுத்த விளைவினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

★ பல இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் சாகடிக்கப்பட்டனர்.

★ ஒரே நேரத்தில் 60 குண்டுவீச்சு விமானங்கள் எரித்திரிய மக்கள் மீது குண்டு மாரி பொழிந்தன.

★ ஆயினும் அந்த மக்கள் வீறாப்புக் குன்றாமல் புது மெருகுடன் தங்கள் எரித்திரிய நாட்டின் விடுதலைக்காகப் போராடி வெற்றியீட்டியுள்ளனர்.

உறங்காத கண்ணும், ஓயாத கரமும், ஆறாத மனமுமாய் எரித்திரிய மக்கள் தமது இரத்தத்தினாலும், வியர்வையினாலும் உலக வரைபடத்தில் புதிய கோட்டை வரைந்தனர் என்ற பெருமையைச் சித்திரிக்கும் இந்நூலை வாங்கிப்படிக்கத் தவறாதீர்கள்.

தமிழீழ நாட்டின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு இந்த எரித்திரியப் போராட்டம் பற்றிய அறிவுப் பகிர்வு சாலச் சிறந்தது என்ற அடிப்படையில், இந்நூல் வெளியிடப்படுகிறது.

**சகல புத்தகக்கடைகளிலும் கிடைக்கும்**

**நூலின் விலை 50/- மட்டுமே**

(சி-9518)

---

## குளங்கள் புனரமைப்பு

இங்குள்ள எல்லா நீர் வளங்களையும் பாதுகாத்துப் பராமரிக்கவென அதன் பாவனையாளர்களைக் கொண்ட குழுக்களும் அமைக்கப்படவிருக்கின்றன. இக்குழுக்களுக்கான ஆலோசனைகளையும் தொழில் நுட்ப உதவிகளையும் இத்திட்ட செயற்பாடுகளையும். அவை முன்னெடுத்துச் செல்லப்படுவதையும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களே மேற்பார்வை செய்யும்.

பொருண்மிய மேம்பாட்டிற்காக தமிழீழத்தின் அனைத்து வளங்களையும் ஆராய்ந்து இனங்கண்டு அதனைப் பயன்படுத்தும் வழியசைவுகளைத் தெரிவு செய்து சிறிய, பெரிய திட்டங்களாக அவற்றைத் தயாரித்து வளங்களின் உச்சப் பயன்பாட்டிற்கு வழி வகுத்து வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்படவிருக்கும் இத்திட்டத்தின் கீழ் பெருமளவு விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்காலத்தில் வட தமிழீழத்தில் கூடுதலாக இருக்கும் குடியிருப்புத் திட்டங்களுக்கும், கைத்தொழில் மையங்களுக்கும் இந்நீர்வள மேம்பாட்டுத் திட்டம் பெரும் உந்துசக்தியாக அமையவுள்ளது.

நீர் வளங்களை பாதுகாத்துப் பராமரிக்கும் நோக்குடன் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சகல குளங்களையும் குறுகிய காலத்திற்குள் புனரமைப்புச் செய்வதற்கான பாரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

---

...வப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

2. 2ம் லெப். எழுனி (அந்தோனிப்பிள்ளை வில்வராஜா-சாஸ்திரிகூழாங்குளம்-வவுனியா)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

✻ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்தவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9509)

---

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
10- 03- 1971

வீரச்சாவு
26- 05- 1991

## கப்டன் குட்டி ரமேஸ்

**(தர்மலிங்கம் றஞ்சன்)**

தமிழீழ விடுதலை வேட்கையில்
தோன்றி மறைந்த ஆயிரம் ஆயிரம்
ஒளி விளக்குகளில் நீயும் ஒன்றானாய்
காவியமாகி விட்ட எம் நாயகனே
நாளைய தமிழீழத்தில் உன் கதையும் சேரும்!

தவம் வீதி,
அச்சுவேலி தெற்கு.

— குடும்பத்தினர்.

[8378]

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்



## சிந்தனைக்கு

அரசியல் அறிவு பெருகப் பெருக ஒவ்வொரு அரசியல் கட்சியும் மற்ற கட்சியை விட மிக மோசமானது என்பதை ஒப்புக் கொள்வாய்.

- வில்ரோஜர்ஸ்,

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## அரசியல் அமைப்பு மாற்றம் தேவைதானா?

தேர்தலில் வெற்றி பெற்றால் ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றப் போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியக் கமிட்டி அறிவித்துள்ளது. இதன் பிரகாரம் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் தற்பொழுது உள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றப்பட்டு 'வெஸ்மினிஸ்டர்' மாதிரியான பாராளுமன்ற ஆட்சிமுறை கொண்டு வரப்படும் என்பதே ஆகும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை தாம் பதவிக்கு வந்தால் மாற்றப் போவதாக சுதந்திரக் கட்சி இப்பொழுது மட்டும் கூறவில்லை. சில வருடங்களாகவே கூறியே வருகின்றது. ஆனால் சுதந்திரக்கட்சி தேர்தலில் வெற்றி பெற்றால் தற்போதைய தீர்மானத்தை நிறைவேற்றுமா? அவ்வாறான மாற்றத்திற்கு அரசியல் அமைப்பில் உள்ள நிபந்தனைகளை நிறைவேற்ற சுதந்திரக்கட்சியால் முடியுமா? என்பதெல்லாம் தேர்தலின் பின் சிந்திக்க வேண்டியவையாகும்.

ஆனால் சிறிலங்காவிற்கு பொருத்தமானது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையா? பாராளுமன்ற ஆட்சி முறையா? என்பதற்கும், இன்றைய பிரச்சினையை இதில் எவ் அமைப்பு தீர்த்து வைக்கக் கூடியது என்பதுமான கேள்விக்கு எவரும் இலகுவில் பதில் கூறிவிட முடியாது என்பது மட்டுமல்ல, சரியான பதிலை கூறிவிடவும் முடியாது.

ஏனெனில் சிறிலங்கா இவ் இரு ஆட்சிமுறையின் கீழும் தனித்தனியே பல வருடங்கள் இருந்துள்ளது. ஆனால் இவற்றில் எவையும் பிரச்சினையைத் தீர்க்கவில்லை. மாறாகப் பிரச்சினைகளை வலுவடையச் செய்தே வந்துள்ளன. இவற்றிற்கான உதாரணங்களை ஒரு நீண்ட பட்டியலாகவே வெளியிட முடியும்.

பொதுவாகவே இவ்விரு ஆட்சி முறையின் கீழும் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டே வந்தனர். 'வெஸ்மினிஸ்டர்' முறையிலான பாராளுமன்ற அமைப்புத்தான் தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறையை ஆரம்பித்தது என்றால், ஜனாதிபதி ஆட்சிமுறையானது அத்தனை இன ஒடுக்கலின் உச்சத்திற்கே கொண்டு சென்றது ...

# மனிதாபிமான முகம் காட்டுவது ஐ.தே.கவிற்கு இப்போ அவசியம்

-காமினி திசாநாயக்கா

(கொழும்பு)

ஐ.தே.கவிற்கு மனிதாபிமானமுகம் கொடுக்கப்பட வேண்டும் இதுவே இன்றைய தேவையாகும், இவ்வாறு காமினி திசாநாயக்கா கூறியுள்ளார். பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற பின்னர் ஐலண்ட் வார இதழுக்கு பேட்டியளித்த அவர் ஐ.தே.கவின் தற்போதைய பிரதான பலவீனம் என்ன என்பது பற்றி விளக்குகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: சில பகுதிகளில் சிலர் ஆயுத பலத்தைக் காட்டுவதன் மூலம் தம்மைச் சட்டத்தின் வரையறைக்கு உட்படாதவர்களாகக் காட்டிக் கொண்டுள்ளனர். இந்த நாட்டிலுள்ள எவருக்கும் ஏற்புடையதல்லாத வகையில் விசேடமான நபர்கள் செயற்படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதன் மூலமாக சமூகத்தில் பதற்றமும் வன்முறையும் ஏற்பட்டது. விசேடமான நடவடிக்கைகள் மூலம் இது கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில், வடக்கு, கிழக்கு பகுதியில் மட்டுமன்றி தலைநகரிலும் ஜனாதிபதி உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கொல்லப்படும் அளவுக்கு வன்முறை கடந்த காலத்தில் இருந்துள்ளது ஜனநாயகத்தில் இத்தகைய காட்சிகளுக்கு இடமிருக்க முடியாது எனினும் ஜனநாயகம் நன்கு வளர்ச்சியடைந்துள்ள மேற்கு நாடுகளில் கூட வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற வண்ணம் தான் இருக்கின்றன. எனவே தான் ஐ.தே.கவானது வன்முறைச் சூழலற்ற பாதுகாப்பு உணர்வு மிகுந்த ஒரு நிலையை உருவாக்க வேண்டியதை தனது முக்கிய பணியாகக் கருத வேண்டியுள்ளது.

## கட்சியைப் பலப்படுத்தவே ஐ.தே.கவில் இணைந்தேன்

### காமினி திசாநாயக்கா கூறுகிறார்

என்னுடன் இணைந்து செயற்படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைவதாககட்சியின் செயற்குழு உறுப்பினர் பலர் என்னிடம் தெரிவித்துள்ளனர் என காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கட்சியினை பலப்படுத்தவே நான் ஐ.தே கவில் இணைந்தேன். புதிய சர்வதேச ஒழுங்கிற்கு இசைவாக இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களை 1977 இலிருந்து ஐ.தே.கவே உருவாக்கி வருகிறது இது தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். அதேசமயம் வேறு பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும். தீர்க்கப்படாமல் நீடிக்கும் இனப்பிரச்சினையை எமது உடனடி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

மேற்கு நாடுகளிலும் வன்முறைகள் இடம்பெறத்தான் செய்கின்றது. இவ் வன்முறைகளைக் களைய கட்சி பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்

## வங்கிக்கடன் தள்ளுபடி

(கொழும்பு)

திருப்பிச் செலுத்தப்படாத வங்கிக்கடன்களை தள்ளுபடி செய்வதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

1971-ம் ஆண்டுக்குப் பின்னர் வங்கிகளில் கடன்பெற்று சாகுபடியில் ஈடுபட்ட விவசாயிகள் சாகுபடியில் நட்டம் ஏற்பட்டதாலும், காலநிலைக் கோளாறுகளினாலும் வங்கிக்கடனைத் திருப்பிச் செலுத்தாத சுமார் எழுபத்தையாயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள் இதனால் நன்மை பெறவுள்ளனர்.

சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் தலைவர் டாக்டர் ராஜித சேனாரத்னா தலைமையில் கமத்தொழில் தொடர்பு நிலையத்தின் தலைவர் ஜாகர்ண ஜாகொட உட்பட பல பிரதிநிதிகள் கொண்ட தூதுக்குழுவொன்று அண்மையில் ஜனாதிபதியை சந்தித்து பேச்சு நடத்தியதை அடுத்து இக் கடன்கள் ரத்துச்செய்யும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விவசாயிகளின் பூரண தகவல்கள் கிடைத்தவுடன் இது தொடர்பான பணிப்புரைகள் அரச வங்கிகளுக்கும் ஏனைய நிதிநிறுவனங்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

## எதிர்கால

பகத்சிங், பாலகெங்காதர திலகர் போன்றோரில் எனக்கு ஏற்பட்ட பற்றும், ரசனையும் இந்த வாசிப்பின் விளைவுகள் தான். என் போராட்ட வாழ்வின் அத்திவாரம் இப்படியான புத்தகங்களின் வாசிப்பினால் தான் கட்டியெழுப்பப்பட்டது. இந்திய விடுதலைப் போரின்பால் எனக்குள் ஏற்பட்ட ஆர்வமும், அந்நிய ஆட்சியின் ஆதிக்க அடக்குமுறைக்கு எதிரான கொதிப்புணர்வும் இந்த வாசிப்புப் பழக்கத்தினாலேயே ஏற்பட்டன.

1958ஆம் ஆண்டு, இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரமும், ஈழத் தமிழினம் இந்தக் கலவரத்தினால் சந்தித்த இன்னல்களும் எனக்குள் ஏற்படுத்திய தாக்கங்களே என்னைப் போராடத் தூண்டின. அன்றாடம் நான் வாசித்தறிந்த செய்திகளே என்னில் ஒரு ஆவேசப் புயலை ஏற்படுத்தியது. தமிழகத்து எழுத்தாளர்களான கௌசியனின் ''பாமி...

வாழ வேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு அறிவுறுத்தின. எல்லாவற்றுக்கும் மேலாக சுபாஸ் சந்திர போஸின் வாழ்க்கையே எனக்கு ஆதர்ஸ ஒளியாக வழிகாட்டியது. அவரது ஒழுக்க வாழ்வும், நாட்டின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்த விதமும் எனக்கு வழிகாட்டியாக அமைந்தது. வாசிக்கும்போது எனக்கு ஒரு வழக்கமிருந்தது வெறும் மேற்போக்கான வாசிப்பாக இல்லாமல், வாசிக்கும் நூலுக்குள் ஆழ்ந்து போகும் ஒரு தன்மையை நான் கொண்டிருந்தேன். நூல்களுடன் ஒன்றிப்போவேன். வாசித்து முடிந்ததும் ஏன்? எதற்கு? இப்படி ஏன் ஆனது? என்ற வினாக்கள் என்னில் எழும். அந் நூலின் கதையுடனும், பாத்திரங்களுடனும் எமது வாழ்க்கையையும், எம்மினத்தின் வாழ்க்கையையும் சேர்த்துப் பார்ப்பேன். அப்பொதெல்லாம் என்னினத்தின் விடிவிற்காகப் போராட வேண்டும் என்ற எண்ணமே என்னுள் மேலோங்கி நிற்கும். சரித்திர, வரலாற்று நூல்களுடன், ...

யான வீடென்ற சுற்று வட்டத்துக்குள்ளேயே என்சின்ன வயதின் வாழ்வு கழிந்தது.

எட்டாம் வகுப்பில் நான் படித்துக் கொண்டிருந்த போது எனது ஊரான வல்வெட்டித்துறையில் ''வல்வைக் கல்வி நிலையம்'' என்ற கல்வி நிலையம் இயங்கிக் கொண்டிருந்தது. உயர்கல்வி கற்ற இளைஞர்கள் சிலர் தங்கள் ஊரைமுன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் என் வீட்டுக்கு அயலிலிருந்த ''சிவகுரு வித்தியாசாலை''(ஆலடி பாடசாலை)யில் இந்த கல்வி நிலையத்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

இரவில் கீழ்வகுப்பைச்சேர்ந்த மாணவருக்கு 'ரியூசன்' சொல்லிக் கொடுப்பதுவும் இக் கல்வி நிலையத்தின் பணியாக இருந்தது. எனது ஊரைச் சேர்ந்த தமிழ் ஆசிரியரான வேணுகோபால் அவர்கள் ''தமிழர்கள் ஆயுதமேந்திப் போராட வேண்டும்'' என்ற கருத்தை எமக்குப் போதிப்பார். இவர் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் தீவிர ஆதரவாளராக இருந்து பின்னர் அக் கட்சியின் ...

...தின்போது எனக்கு அன்பளிப்பாகக் கிடைத்த மோதிரத்தை விற்று எழுபது ரூபா பெற்றுக் கொண்டோம். எல்லாமாக சேர்ந்து எம்மிடம் நூற்றிப்பத்து ரூபா இருந்த போது மிகுதிப்பணம் இல்லாத காரணத்தினால் இந்த 'ரிவோல்வர்' வாங்கும் திட்டத்தை கைவிட நேர்ந்தது இப்படியாக என் இளம்பராயம் போராட்டம், விடுதலை, இனத்துக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பு, என்ற எண்ணங்களுடனேயே கழிந்தது. கழிந்தது என்று சொல்லுவதிலும் பார்க்க வளர்ந்தது என்று சொல்லுவதே பொருத்தமானது என்று நினைக்கின்றேன்.

நான் படிக்கும் காலத்தில் என்னொத்த மற்றவர்கள் எல்லாம் விளையாடிக்கொண்டிருப்பார்கள் நான் மட்டும் அகப்பட்ட மூலப் பொருட்களைக் கொண்டு வெடிகுண்டு செய்வதிலும் அதை வெடிக்கச்செய்வதிலுமே ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். நிச்சயமாக பதின்நான்கு வயதில் போராட வேண்டுமென்று நான் துடித்த துடிப்பு இருக்கிறதே, அது அன்றைய என் வயதொத்த சிறுவர்களின் வாழ்க்கையிலிருந்து மாறுபட்டதாகவேயிருந்தது.

கேள்வி: எமது தேசத்தில் இன்று நிலவும் விடுதலைப் போராட்டச் சூழலில் கலை இலக்கியத்தின் பங்கு எவ்வாறு அமைய வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்.

பதில்: கலை, இலக்கியங்கள் இன்றைய போராட்ட வாழ்வை சித்தரிப்பதாக அமையவேண்டும் இன்றைய காலத்தை உருவகிப்பதாக அமைய வேண்டும் இன்றைய வரலாற்றுப் போக்கை பதிவு செய்வதாக இருக்க வேண்டும்.

கலையும், இலக்கியமும் வாழ்க்கையை கருப் பொரு...

முடிகின்றது. இது நல்லதொரு அறிகுறி. காலப்போக்கில் அநுபவமுதிர்ச்சியில் எமது போராளிகளிடம் இருந்து சிறந்த கலை இலக்கியப் படைப்புக்களை எதிர்பார்க்கலாம். எமது போராளிகளே வரலாற்றின் கதாநாயகராக இருந்து காலத்தை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள் அவர்களே அந்தக் காலத்தைப் பதிவு செய்யும் போது அது உண்மையானதாகவும், உன்னதமானதாகவும் அமைந்து விடுகிறது.

தமிழரின் சரித்திரத்திலேயே இன்றைய காலம் ஒரு முக்கியமான யுகம் இன்றைய காலத்தில் கட்டவிழும் விடுதலை வரலாற்றை, கலை இலக்கியமாக உருவகப்படுத்தி அடுத்த தலைமுறையினரும் அறியச் செய்வது இன்றைய சிருஷ்டிகர்த்தாக்களின் முக்கிய கடமையாக நான் கருதுகின்றேன்.

போராட்டம் பற்றியும், போர்க்கள வாழ்வு பற்றியும் ஆழமான அநுபவத்தையும், துல்லியமான பார்வையையும் கொண்டு வளர்வதால் எமது போராளிகள், சிறந்த படைப்பாளிகளாகமாறி, ஒருகாலம், உன்னதமான கலை இலக்கியங்களைப் படைப்பார்கள் என்பது எனது நம்பிக்கை. அதனால் தான் எமது இயக்கத்தில் முளைத்துவரும் இளம் எழுத்தாளர்களையும், கலையார்வம் கொண்டவர்களையும் நான் ஊக்குவித்து வருகின்றேன்.

கேள்வி: இப்போராட்டச் சூழலில் பாதிப்புக்குள்ளான சிறுவர் நலனில் நீங்கள் அதிக ஆர்வமும், அக்கறையும் காட்டி பல செயற்திட்டங்களையும் உருவாக்கி வருகின்றீர்கள். இந்த குழந்தைகளை அரவணைத்து, அவர்களின் எதிர்கால வாழ்வு சுபீட்சம் அடைய வேண்டும் என்று நீங்கள் விரும்புவதன் ...

ஆனால் சிறிலங்காவிற்கு பொருத்தமானது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையா? பாராளுமன்ற ஆட்சி முறையா? என்பதற்கும், இன்றைய பிரச்சினையை இதில் எவ் அமைப்பு தீர்த்து வைக்கக் கூடியது என்பதுமான கேள்விக்கு எவரும் இலகுவில் பதில் கூறிவிட முடியாது என்பது மட்டுமல்ல, சரியான பதிலை கூறிவிடவும் முடியாது.

ஏனெனில் சிறிலங்கா இவ் இரு ஆட்சிமுறையின் கீழும் தனித்தனியே பல வருடங்கள் இருந்துள்ளது. ஆனால் இவற்றில் எவையும் பிரச்சினையைத் தீர்க்கவில்லை. மாறாகப் பிரச்சினைகளை வலுவடையச் செய்தே வந்துள்ளன. இவற்றிற்கான உதாரணங்களை ஒரு நீண்ட பட்டியலாகவே வெளியிட முடியும்.

பொதுவாகவே இவ்விரு ஆட்சி முறையின் கீழும் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டே வந்தனர். 'வெஸ்மினிஸ்டர்' முறையிலான பாராளுமன்ற அமைப்புத்தான் தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறையை ஆரம்பித்ததென்றால், ஜனாதிபதி ஆட்சிமுறையானது அதனை இன ஒடுக்கலின் உச்சத்திற்கே கொண்டு சென்றது. பாராளுமன்ற ஆட்சி முறையில் மலையகத் தமிழ்மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதென்றால், ஜனாதிபதி ஆட்சி முறையின் போது இலங்கைத்தமிழ் மக்களின் பாராளுமன்ற உறுப்பினர் உரிமைகள் பறிக்கப்பட்டன.

இதே போன்றே அரசிற்கு எதிரான ஆயுதக்கிளர்ச்சிகளும், இரும்புக்கரம் கொண்டு நசுக்கப்பட்டன. இதில் இரு அமைப்பிற்கும் இடையில் இருந்த வித்தியாசம் கொல்லப்பட்ட ஜே.வி.பீ. கிளர்ச்சியாளர்களின் எண்ணிக்கையும், கொல்லப்பட்ட முறைகளுமே தவிர, வேறு எதுவும் இருக்கவில்லை. ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்கள் மிருகங்கள்போன்று வேட்டையாடப்பட்டனர் என்பதே உண்மையும் ஆகும்.

மேலும் இவ்விரு அமைப்பு ஆட்சியின் போதும் எதிர்க்கட்சியினர் ஜனநாயக ஆட்சியின் ஒரு அங்கம் என நோக்கப்படவில்லை. என்றும் எதிரிகளாகவே நோக்கப்பட்டதோடு, அவர்களை இன்னல்படுத்துவதே அரசாங்கக்கட்சியின் நோக்கமாகக் கொள்ளப்பட்டது.

இதேவேளை, இவ்விரு அரசியலமைப்பைஉருவாக்கியவர்களும், அமுல்படுத்தியவர்களும், அவ் அமைப்புக்களில் எவைஎவைமக்களின்பாதுகாப்பிற்கும், உரிமைக்கும் துணையாக இருக்கும் என்று கூறினார்களோ, அவையே இறுதியில் மக்களுக்கு விரோதமானவையாக மாறியமையாகும். அதிலும் கேவலமானது, தாமே உருவாக்கிய அரசியல் அமைப்பில் உள்ள ஓட்டைகளை தமது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள அக் கட்சிகளே கடைப்பிடிக்கத் தொடங்கியமையாகும்.

ஆனால் இவை இரண்டு அமைப்பிற்கும் இடையில் சிறு வித்தியாசமும் இருக்கத்தான் செய்தது. பாராளுமன்ற அமைப்பு முறையில் பொறுப்புக்களை அமைச்சரவை கூட்டாக ஏற்க ஜனாதிபதி ஆட்சி முறையில் பொறுப்புக்களை நிறைவேற்ற அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஏற்றுக் கொள்கின்றார். ஆனால், இதில் மக்களுக்கு என்ன நன்மை? குற்றங்களின் பொறுப்பை யார் ஏற்றால் என்ன? ஏற்காது விட்டால் என்ன? ஏனெனில் யாராவது தண்டிக்கப்படவா போகின்றார்கள்?

உண்மையில் ஜனாதிபதி ஆட்சிமுறையாக இருப்பினும் சரி, பாராளுமன்ற ஆட்சிமுறையாக இருப்பினும் சரி, இரண்டையும் அதிகாரத்தில் இருப்பவர்கள் தமது தேவைக்கு ஏற்ப பயன்படுத்தினர் என்பதே சரியானதாகும். அதிகாரம் எந்த அமைப்பு முறை மூலம் கிட்டினால் என்ன, அவர்கள் சர்வாதிகாரிகளாகவேஇருந்துள்ளனர்.

இந்நிலையில் தான் சிறிலங்கா போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு ஜனநாயக அமைப்பு முறையிலான ஆட்சி முறை குறித்து கேள்வி எழுப்புகின்றது. ஏனெனில், பெரும்பான்மைக் கட்சியின் ஆட்சி என்பது பெரும்பான்மைக் கட்சியின் சர்வாதிகாரமாக அமைவதே காரணமாகும்.

---

யெழுப்பப்பட்டது. இந்திய விடுதலைப் போரின்பால் எனக்குள் ஏற்பட்ட ஆர்வமும், அந்நிய ஆட்சியின் ஆதிக்க அடக்குமுறைக்கு எதிரான கொதிப்புணர்வும் இந்த வாசிப்புப் பழக்கத்தினாலேயே ஏற்பட்டன.

1958ஆம் ஆண்டு, இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரமும், ஈழத் தமிழினம் இந்தக் கலவரத்தினால் சந்தித்த இன்னல்களும் எனக்குள் ஏற்படுத்திய தாக்கங்களே என்னைப் போராடத் தூண்டின. அன்றாடம் நான் வாசித்தறிந்த செய்திகளே என்னில் ஒரு ஆவேசப் புயலை ஏற்படுத்தியது. தமிழகத்து எழுத்தாளர்களான கௌசியனின் ''பாமினிப்பாவை'', சாண்டில்யனின் ''கடற்புறா'', கல்கியின் ''பொன்னியின் செல்வன்'' போன்ற நாவல்களை நான் வாசித்தபோது, எமது மூதாதையோர் எப்படிப் பெரும் சாம்ராச்சியங்களை அமைத்து ஆட்சி புரிந்தார்கள் என்பதை அறிந்து கொண்டேன். திரும்பவும் எமது இனம் தலை நிமிர்ந்து, தன்னாட்சி பெற்று உலகத்தையே வியப்பில் ஆழ்த்தும் விதமாக வாழவேண்டும் என்ற ஆர்வத்தை இந்த நூல்கள் என்னுள் ஏற்படுத்தின.

அடிமைத் தனத்திற்கு எதிராக ஏன் நாங்கள் ஆயுதமேந்திப் போராடக் கூடாதென்ற எண்ணத்தை இந்த நூல்கள் என் மனதில் எழுப்பின. மகாபாரதம், இராமாயணம் போன்ற காவியங்களை இளம் வயதில் நான் விரும்பி வாசித்தேன். அவையும் என்னுள் சில சிந்தனைத் தெறிப்புகளை ஏற்படுத்தின. ''கடமையைச் செய் பலனை எதிர் பார்க்காதே'' என்ற ஆழமான கருத்தை பகவத்கீதையை நான் வாசித்த போதே புரிந்து கொண்டேன். நல்ல வழிகாட்டும் அறநெறிக் கதைகளை நான் வாசித்தபோது நல்லவனாகவும், ஒழுக்க சீலனாகவும், கட்டுப்பாடுடையவனாகவும், சமூகத்திற்கு நற்பணி செய்பவனாகவும் நான்

## ஜனாதிபதி

இதற்காக ஜூன் மாதம் 11ம் திகதி நடைபெறும் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என்றும், வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேரும் நோக்கம் கிடையாது என தான் அறிவித்ததற்கு கட்சியில் வரவேற்பு கிடைத்துள்ளதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

## சந்திரிகாவை

எட்டு அதிரடிப் படையினரையாவது கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன

---

வாசிக்கும்போது எனக்கு ஒரு வழக்கமிருந்தது வெறும் மேற்போக்கான வாசிப்பாக இல்லாமல், வாசிக்கும் நூலுக்குள் ஆழ்ந்து போகும் ஒரு தன்மையை நான் கொண்டிருந்தேன். நூல்களுடன் ஒன்றிப்போவேன். வாசித்து முடிந்ததும் ஏன்? எதற்கு? இப்படி ஏன் ஆனது? என்ற வினாக்கள் என்னில் எழும். அந் நூலின் கதையுடனும், பாத்திரங்களுடனும் எமது வாழ்க்கையையும், எம்மினத்தின் வாழ்க்கையையும் சேர்த்துப் பார்ப்பேன். அப்பொதெல்லாம் என்னினத்தின் விடிவிற்காகப் போராட வேண்டும் என்ற எண்ணமே என்னுள் மேலோங்கி நிற்கும். சரித்திர, வரலாற்று நூல்களுடன், கலைக்கதிர் போன்ற விஞ்ஞான அறிவு நூல்களையும நான் விரும்பி வாசிப்பேன். அறிவியல் ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் எனது இனமும் எனது மக்களும் வளர வேண்டும் என்று நான் அதிகம் விரும்பினேன். எமது மண் விடுதலை பெற்று, விஞ்ஞான ரீதியில் சாதனை படைக்க வேண்டும் என என்னுள் ஒரு கனவை வளர்த்துக் கொண்டேன். இந் நூல்கள் மூலம் பரந்த உலகப்பார்வை ஒன்று எனக்குள் விரிந்து கொண்டது. கற்பனையில் மட்டும் காலம் கழிக்காது செயல்ரீதியாக எதையாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை என் மனதில் ஏற்படுத்தியது. எமது தமிழினத்திற்கு செயற்பாட்டுத் தன்மையே இனித் தேவையானது என்று நான் நம்பினேன். நான் வாசித்த விடுதலைப் போராட்ட நூல்கள் ''ஒரு போராளி புனிதமானவனாகவும், தன்னலமற்றவனாகவும், மக்களுக்காக தன்னை அர்ப்பணிப்பவனாகவும் இருக்க வேண்டும்'' என்ற செய்தியை என்னுள் தெரிவித்துக் கொண்டன. இப்படி நான் வாசித்த பல்வேறு நூல்கள் தான் என் இனத்திற்காக என்னைப் போராடத் தூண்டின.

கேள்வி: உங்கள் சிறு பராய வாழ்க்கை இன்றைய இளம் சந்ததியின்வாழ்வு நிலைக்கு முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்திருக்கும். அந்த இளம் பராய வாழ்க்கை பற்றி வெளிச்சத்துக்கு விபரிப்பீர்களா?

பதில். சின்னவயதில்என்வீட்டுக்கு நான் செல்லப்பிள்ளை அதனால் எனக்கு வீட்டில் அதிக கட்டுப்பாடு இருந்தது. பெற்றோர்கள் என்னை வீட்டுக்கு வெளியே விடுவது அபூர்வம். அயல்வீட்டுப் பிள்ளைகள் மட்டுமே என்விளையாட்டுத் தோழர்கள். என் வீடு, அயல்வீடு என்று இவற்றைச் சுற்றியே என் உலகம் இருந்தது. தனித்த, அமைதி

---

கள் ஊரைமுன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் என் வீட்டுக்கு அயலிலிருந்த ''சிவகுரு வித்தியாசாலை''(ஆலடி பாடசாலை)யில் இந்த கல்வி நிலையத்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

இரவில்கீழ்வகுப்பைச்சேர்ந்த மாணவருக்கு 'ரியூசன்'சொல்லிக் கொடுப்பதுவும் இக் கல்வி நிலையத்தின் பணியாக இருந்தது. எனது ஊரைச் சேர்ந்த தமிழ் ஆசிரியரான வேணுகோபால் அவர்கள் ''தமிழர்கள் ஆயுதமேந்திப் போராட வேண்டும்'' என்ற கருத்தை எமக்குப் போதிப்பார். இவர் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் தீவிர ஆதரவாளராக இருந்து பின்னர் அக் கட்சியின் ''போராட்டத் தீவிரம் போதாது'' என்று திரு வி. நவரத்தினத்துடன் இணைந்து சுயாட்சிக் கழகத்தை உருவாக்கியவர்களில் ஒருவர். இவரே, எனக்கு ஆயுதப் போராட்டத்தின் தேவையையும் அதன் மீது நம்பிக்கையையும் ஏற்படுத்தியவர் ஆவார். எனது ஊர் இராணுவ அடக்குமுறையை தினசரி சந்திக்கும். இதனால் இராணுவத்தின் மீது சின்ன வயதிலேயே எனக்கு வெறுப்பு அதிகமானது. இத்துடன் சேர்ந்து ஆசிரியர் வேணுகோபால் அவர்கள் ஊட்டிய ஆயுதப்போராட்ட உணர்வும் விடுதலைத் தாகமும் என்னுள் ஒரு வேகத்தை ஏற்படுத்தின. நானும் என் வயதொத்த நண்பர்களும் இவருக்குப் பின்னால் திரிந்தோம்.

இப்படியெழுந்த விடுதலைத் தாகத்தால் எனது பதின்நான்காவது வயதில் எமது பாடசாலையில் விடுதலைக்காகப் போராட வேண்டும், இராணுவத்தினரைத்தாக்க வேண்டும் என்று நானும், என் உணர்வொத்த ஏழு இளைஞர்களும் சேர்ந்து பெயரில்லாத ஒரு இயக்கத்தை ஆரம்பித்தோம். நானே அவ்வியக்கத்தின் தலைவராக இருந்தேன். எங்களுக்கு அப்போதெல்லாம் ஆயுதமொன்று வாங்கவேண்டும், வெடி குண்டொன்று செய்யவேண்டும் என்ற உணர்வே மேலோங்கியிருந்தது. வீட்டில் கிடைக்கும் பணத்தில் வாரத்துக்கு இருபத்தைந்து சதத்தை இவர்கள் என்னிடம் தருவார்கள் நான் சேகரித்துக் கொள்ளுவேன். இப்படியாக நாற்பது ரூபா எங்களிடம் சேர்ந்துவிட்டது. இந்த நேரத்தில் எமது பக்கத்து ஊரில் இருந்த ''சண்டியன்'' ஒருவரிடம் நூற்றியம்பது ரூபாவுக்கு ''ரிவோல்வர்'' ஒன்று விற்பனைக்கு இருப்பதாக அறிந்தோம். எப்படியும் அந்த ''ரிவோல்வரை'' வாங்கிவிட வேண்டும் என்ற துடிப்பில் என் சகோதரியின் திருமணத்

---

கிறதே. அது அன்றைய என் வயதொத்த சிறுவர்களின் வாழ்க்கையிலிருந்து மாறுபட்டதாகவேயிருந்தது.

கேள்வி: எமது தேசத்தில் இன்று நிலவும் விடுதலைப் போரட்டச் சூழலில் கலை இலக்கியத்தின் பங்கு எவ்வாறு அமைய வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்.

பதில்; கலை, இலக்கியங்கள் இன்றைய போராட்ட வாழ்வை சித்தரிப்பதாக அமையவேண்டும் இன்றைய காலத்தை உருவகிப்பதாக அமைய வேண்டும் இன்றைய வரலாற்றுப் போக்கை பதிவு செய்வதாக இருக்க வேண்டும்.

கலையும், இலக்கியமும் வாழ்க்கையை கருப்பொருளாகக் கொண்டவை வாழ்க்கையை தரிசித்து நிற்பவை. வாழ்வனுபவத்தைக் குறியீடு செய்பவை. இன்று எமது வாழ்வும் வாழ்வனுபவமும், விடுதலைவேண்டிய ஒரு போராட்டத்துடன் பிணைந்து நிற்கிறது. இந்த போராட்ட சூழ்நிலையே எமது வாழ்வை நிர்ணயிப்பதாகவும் அமைந்து விட்டது. எனவே, எமது கலை, இலக்கியங்கள் இந்தப் போராட்ட வாழ்வின் தன்மைகளை, அந்த வாழ்வில் பிறக்கும் ஆழமான அநுபவத்தழும்புகளை, உணர்வலைகளை சித்தரித்துக் காட்ட வேண்டும். அதேவேளை, விடுதலை என்ற உன்னதம் பற்றி விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பதாக அமையும் பொழுது அவை சிறப்புப் பெறுகின்றன. மானிட விழுமியங்களை வலியுறுத்தி, மனித மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்ட படைப்புக்களே சிகரத்தை எட்டுகின்றன. தமிழீழ போராட்டச் சூழலில் இன்று மையம் கொண்டிருக்கும் இலக்கிய எழுச்சி எதிர்காலத்தில் அதியுன்னதமான ஆக்க இலக்கியங்களை படைத்து உச்சங்களைத் தொடும் என்று திடமாக நம்புகின்றேன்.

கேள்வி; எமது இயக்கத்தைச் சேர்ந்த இளம் போராளிகள் இன்று படைப்பாளிகளாக மாறிவருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது இவர்கள் இன்றைய போராட்டம் பற்றியும், போர்க்கள வாழ்வு பற்றியும் எழுதி வருகின்றனர் போர்க்கால இலக்கியத்துக்கு வளம் சேர்த்து வரும் இந்தப் புதிய கலை, இலக்கியம் பற்றி தாங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

பதில்; தமிழீழத்தில் போர்க்கால இலக்கியம் வளர்ந்து வருகின்றது. எமது இளம் போராளிகள் பலர் படைப்பு இலக்கியத்தில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். சிலரிடம் தரம் வாய்ந்த எழுத்துக்களையும், கலைப்பாட்டுக்களையும் அவதானிக்க

---

பாளிகளாகமாறி, ஒருகாலம், உன்னதமான கலை இலக்கியங்களைப் படைப்பார்கள் என்பது எனது நம்பிக்கை. அதனால் தான் எமது இயக்கத்தில் முளைத்துவரும் இளம் எழுத்தாளர்களையும், கலையார்வம் கொண்டவர்களையும் நான் ஊக்குவித்து வருகின்றேன்.

கேள்வி: இப்போராட்டச் சூழலில் பாதிப்புக்குள்ளான சிறுவர் நலனில் நீங்கள் அதிக ஆர்வமும், அக்கறையும் காட்டி பல செயற்திட்டங்களையும் உருவாக்கி வருகின்றீர்கள். இந்த குழந்தைகளை அரவணைத்து, அவர்களின் எதிர்கால வாழ்வு சுபீட்சம் அடைய வேண்டும் என்று நீங்கள் விரும்புவதன் காரணம் என்ன?

பதில்: ஒரு நாட்டை கட்டியமைக்க நான் துடிக்கின்றேன். அதனையே எனது வாழ்க்கையின் இலட்சியமாக வரித்துக் கொண்டுள்ளேன். நாம் கட்டியெழுப்பமுனையும் இந்த நாட்டுக்கு எதிர்கால சந்ததியே ஆதாரமானது. எனவே நாட்டைக்கட்டியமைப்பதோடு எதிர்கால சந்ததியையும் உயரிய பண்புகளுடனும் வளர்த்து எடுக்க வேண்டியது முக்கியமானதாக நான் கருதுகின்றேன். இதனால்தான் எதிர்கால சந்ததியை வளர்ப்பதில் அதிகளவு அக்கறை காட்டுகின்றேன். எமது நாட்டின் எதிர்கால சிற்பிகளாக ஒரு புதிய இளம்பரம்பரையை உருவாக்கவேண்டும் என்பதே எனது அவா. அறிவியல் ஆற்றல் மிகுந்தவர்களாக, தேசத்தில் பற்றுக்கொண்டவராக, நேர்மையும், கண்ணியமும், வீரமும், மானமும் உள்ளவர்களாக, போர்க்குணம் மிக்கவர்களாக இந்த புதிய பரம்பரை உருவாக வேண்டும்.

இந்தப் போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமிகளை நாம் அரவணைத்து வளர்த்து வருகின்றோம். இவர்களை நான் அநாதைகளாகவோ யாருமற்றவர்களாகவோ கருதவில்லை இவர்கள் தமிழன்னையின் குழந்தைகள். இவர்கள் எம்மண்ணில் மலர்ந்துள்ள புஷ்பங்கள். நாம்எமது மொழியையும், மண்ணையும் தாய் மொழியென்றும், தாய் மண்ணென்றும் அன்னை வடிவில் காண்பது போன்று இவர்களையும் எமது தேசியத் தாயின் பிள்ளைகளாகவே நான் கருதுகின்றேன். இந்த சிறுவர்களை சிறப்பாக வளர்த்து எடுத்து அவர்களுக்கு செம்மையான கல்வியை ஊட்டி, எமது தேசத்தின் எதிர்கால சிற்பிகளாக உருவாக்குவது எமது கலையாய கடமையாக கருதுகிறேன். அதனால் தான் இவர்கள் மீது எனது விசேட கவனத்தைச் செலுத்துகின்றேன்.

### தலைமன்னார் அகதிமுகாமில் வைத்து

# இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர் சீருடை அணிந்தோரால் கடத்தல்

[தலைமன்னார்]
தலைமன்னாரி ஸ்ரேசன் அகதிமுகாமில் தங்கியிருந்த கட்டுக்காரன் குடியிருப்பைச் சேர்ந்த ஜீவேந்திரன் என்ற குடும்பஸ்தர் சனியன்று அதிகாலை 3.00மணியளவில் இராணுவச் சீருடை அணிந்த இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டார்.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த அகதிமுகாமில் இராணுவச் சீருடையில் வந்த சிலரே இவரை கடத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய அகதிமுகாமிலிருந்து அண்மையில்தான் இவர் தயாகம் திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

ஒரு வாரத்திற்கு முன்னர் இவர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் பெரும் நிலப்பரப்பில் இருக்கும் தனது தாயாரைப் போய்ப்பார்த்து வந்தார் எனவும் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று திருப்பி வந்ததால் புலிகளுடன் இவருக்கு தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இவர் கடத்தப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது

## 'கோமாரி' கப்பலில் 120 தபால் பொதிகள்

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்றுக்காலை வந்து சேர்ந்த 'கோமாரி' கப்பலில் யாழ். தபால் திணைக்களத்திற்கு 120 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இத்தபால்பொதிகள் இன்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டு நாளை முதல் விநியோகம் செய்யபபடும்.

மேலும் இக்கப்பலில் 3 ஆயிரம் மெற்றிக்தொன் பொருள்கள் வந்துள்ளன. இவற்றில் சீனி 1265 மெற்றிக்தொன், அரிசி 1250 மெற்றிக்தொன், தானியவகைகள்வந்தன

இப் பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனேயே ஆரம்பமானது. [யோ]


## மீள ஒப்படைக்கவும்

கடந்த 17-5-94 செவ்வாய்க்கிழமை தாண்டிக்குளம் தடைமுகாமில் எனது உடைமைகளைக் கொண்ட கறுத்த பாக்மட்டக்களப்பில் இருந்து சாவகச்சேரிக்குப் பயணம் செய்த மூன்று பெண்களைக் கொண்ட குடும்பத்தினரிடம் கொடுத்து மீளப் பெற முடியாமல் தவறிவிட்டது தயவுசெய்து அந்த பாக்கை பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திருமதி மனோன்மணி இரத்தினசபாபதி
4-ம் குறுக்குத் தெரு சந்தி,
பருத்தித்துறை.

[சி-9515]

## எமது புதிய வெளியீடு

T. ராஜேந்தர் - கௌதமி - சிலம்பரசன்...

**ஒரு வசந்த கீதம்**

வீடியோ விமல்,
117, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்.

(சி-9520)

## விற்பனைக்கு

கொழும்பு சிமெந்து, கற்பூரம்,
வாள்பிளேட், மோட்டார் சயிக்கிள் உதிரிப்பாகம்

யாவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

C. M. சுகந்தினி
309, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(8384)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**26 - 05 - 1994**
**வியாழன் இரவு**

8.01 - சொல்லுங்கள் பார்க்கலாம்.
8 10 - உரை -'பெண்களே அணிதிரளுங்கள்''
8.20 - உழைப்போம் உயர்வோம்
'' எண்ணத்தைத் தாண்டிய எண்ணிக்கை '' சித்திரம்.
8.30 - செய்திகள்.
8.40 - ஒப்பரேசன் லிபரேசன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி '' அழியாத கோலங்கள் ''

**27 . 05 . 1994**
**வெள்ளி காலை**

7.02 - மாவீரர் வணக்கம்
7.15 - விடுதலைகானங்கள்
7.30 - செய்திகள்
7 35 - பத்திரிகைச் செய்திகள்.
7.40 - தொடர்ந்து விடுதலை கானங்கள்.


## யாழ். ஸ்ரீதரில் மண்ணுக்காக

தினசரிமாலை 3.00மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு காலை 10 30 மணி
மாலை 3மணி, 6மணி
(சி-9514)


### கூட்டம்

கலைப்பீட மாணவர்களின் பொதுக் கூட்டம் இன்று வியாழன் காலை 8 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும்.

### பல்கலைக்

பதி ஏற்றுக் கொண்டார், பரீட்சை எழுதி நான்கு மாதங்களுக்கிடையில் பெறுபேறுகளை வெளியிடுவது மற்றும் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு நடத்தும் வகுப்புகளை பல்கலைக் கழகத்துக்கு வெளியே நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகளையே கலைப் பீடாதிபதி ஏற்றுக் கொண்டார். அவர் ஏற்றுக்கொண்ட இந்தக் கோரிக்கைகளை எழுத்தில் கொடுத்ததைத் தொடர்ந்தே பகிஷ்கரிப்பு வாபஸ் பெறப்பட்டது.

புறநிலைப் படிப்புகள் அலகினால் நடத்தப்படும் விரிவுரைகளைப் பல்கலைக் கழகத்திற்கு வெளியே நடத்த வேண்டும் என்ற தமது மூன்றாவது கோரிக்கையை தாம் மீளப் பெற்றிருப்பதாக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ஏ. ஜே. ஜே. ஆனந்தமூர்த்தி தெரிவித்தார், பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடங்களும் புறநிலைப் படிப்பு அலகுடன் தொடர்புபட்டிருப்பதால் மூன்றாவது கோரிக்கையைத் தாம்அழுத்த விருப்பமில்லை என்றும் அவர் கூறினார்,

### வெஸ்ட்

1970ஆம்ஆண்டுமுதல் எதிர்க் கட்சியிலும், 1991 இல் கட்சியிலிருந்து வெளியேற்றப்படும் வரையில் அரசாங்ககட்சி பாராளுமன்ற உறுப்பினராகவும் நீடித்த தமது அனுபவத்திலிருந்து இதனைக் கூறுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் ஐ. தே. கவை துப்பாக்கி கலாசாரத்திலிருந்தும், பாதாள உலக செல்வாக்கிலிருந்தும் மீட்கப் பாடுபடப் போவதாகவும் குறிப்பிட்டார்.

## பெண்ணே! உனக்குப் பொன் வேலி கண்ணே! அது உன் உயிர்கொல்லி

### தேசப் பற்றை

தொடர்ந்து கூறும்போது மாணவர்கள் தற்போது நடைபெற்று வரும் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு கணிசமான பங்காற்றி வருகின்றனர். இதற்காக மாணவர்கள் பல தியாகங்களைச் செய்து வருகின்றனர். மாணவர்கள் மத்தியில் தேசப்பற்றையும் அறிவியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் நோக்கில் இந்த மாணவர் எழுச்சி நாள் பிரகடனப் படுத்தப்பட்டதாக தெரிவித்தார். இவ் எழுச்சிநாள் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து திரு. இன்பன் விளக்கமளித்தார்.

இம் மாணவர் எழுச்சி நாளை எழுச்சி பூர்வமாக அனுஷ்டிப்பதற்கான சகல முன்னேற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாணவர் எழுச்சிநாளையொட்டி மாணவர் எழுச்சிக் கீதம் ஒன்றும் இயற்றப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் பாடசாலை மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும் நடைபெறவிருக்கின்றன பாடசாலை மட்டத்திலான நிகழ்வுகள் காலையும், கோட்ட மட்டத்திலான நிகழ்வுகள் மாலையும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது

மாணவர் எழுச்சி நாளான அடுத்த மாதம் 5ஆம் திகதி வடதமிழீழத்தில் உள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் காலை 8 30 மணியளவில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றலுடன் மாணவர்எழுச்சி நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகும்

தேசியக் கொடி ஏற்றலைத் தொடர்ந்து பாடசாலைக் கொடி ஏற்றப்படும். இதைத் தொடர்ந்து பாடசாலைக் கீதமும் மாணவர் எழுச்சிப் பாடலும் இசைக்கப்படும். இதைத் தொடர்ந்து மாணவர் எழுச்சி நாள் தொடர்பான விளக்கவுரையை அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் நிகழ்த்துவார்கள். இதைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களால் உருவாக்கப்பட்ட கையெழுத்து நூல்கள் வெளியிட்டு வைக்கப்படும். தொடர்ந்து மாணவர்கள் ஒன்றிணைந்து சில சாத்தியமான சிரமதானப் பணிகளை மேற்கொள்வார்கள். இத்துடன் பாடசாலை மட்டத்திலான எழுச்சி நாள் நிகழ்வுகள் நிறைவடையும்.

அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணியளவில் கோட்ட மட்டத்திலான எழுச்சி நாள் நிகழ்வுகள் அப்பகுதிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு வருவோர் ''பான்ட்'' வாத்தியம்முழங்க வரவேற்கப்படுவர்.

தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியும் கோட்டக் கொடியும் ஏற்றப்படும். இதனைத் தொடர்ந்து மாணவர் எழுச்சிப் பாடல் இசைக்கப்படும். இவ் எழுச்சிப் பாடலைத் தொடர்ந்து மாணவர் எழுச்சி நாள் தொடர்பான அறிக்கையை அந்தந்தக் கோட்டப் பொறுப்பாளர்கள் வாசிப்பார்கள். தொடர்ந்து சிறப்புரைகள் இடம் பெறும்.

இதைத் தொடர்ந்து கோட்டமட்டத்திலான தமிழ்த் தினப் போட்டியிலும் ஆண்டு ஐந்துக்கான ஆண்டு இறுதிப் பரீட்சையிலும் சிறப்பாகச் சித்தி அடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நடைபெறும் தொடர்ந்து பல்வேறு கலைநிகழ்வுகள் நடைபெறும்- இந்த நிகழ்வின் இறுதியில் தேசியக் கொடி இறக்கும் வைபவம் நடைபெறும். [க]

### உதைபந்தாட்டம்

அளவெட்டி விநாயகர் வி. கழகம் மகாஜனக் கல்லூரியின் இணுவில் மைதானத்தில் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இன்றைய போட்டிகளின் அரை இறுதி ஆட்டங்களில் இரண்டாம்பிரிவு 3 00 மணிக்கு யங்கென்றிஸ் வி. கழகம் எதிர் சித்தி விநாயகர் வி. கழகமும் 4·00 மணிக்கு பொற்பதி வி கழகம் எதிர் ஞானமுருகன் வி கழகமும் போட்டிகளில் பங்குபற்றுகின்றன

### பயிற்சி

சேர்க்கப்பட்ட 15 வருடகாலத்திற்கும் கூடுதலான அனுபவமுடையவர்களும் இதனால் பயன்பெறுவர் என பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

### தேசிய

புதியவையல்ல என்று ஒபயவன்சகூறிக்கொள்ளும்போதும் அவரது குடும்பத்தினர் தமக்கு ஏதாவது வகையில் ஆபத்து நேரலாம் என ஐயம் கொண்டுள்ளனர்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப்டினன்ட் இறையன்பன் | ஜோன்சன்**

## மரண அறிவித்தல்

### செல்வி நிரஞ்சலா இராசநாயகம்

செல்வி நிரஞ்சலா இராசநாயகம் 25-5-94-ல் காலமாகிவிட்டார் அன்னார் வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவியும், கணக்கியல். கணக்கு ஆய்வு கற்கை நெறியில் பயின்று வந்தவரும், இராசநாயகம் (பிரசித்த நொத்தாரிஸ்) விஜயகுமாரி ஆகியோரின் மகளும், சாந்தமலரின் பெறாமகளும், வத்சலா, சர்மிலா, ராஜ்குமார் (ரீகன்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 26-5-94 பிற்பகல் 4. 00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
S. S. இராசநாயகம்

91/8 இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்
யாழ்ப்பாணம். [8390]


வேண்டிய இடம்

C. M. சுகந்தினி
309, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(8384)

சனி, ஞாயிறு காலை
10 30 மணி
மாலை 3மணி, 6மணி
(சி-9514)

## 7-ம் ஆண்டுநினைவு 3-ம் ஆண்டுநினைவு





**2-ம் லெப். ரம்போ சிவா**
**(தங்கவடிவேல் சிவகுமாரன்)**

**2-ம் லெப். உத்தவா**
**(தங்கவடிவேல் சந்திரகுமாரன்)**

25-11-1968 <— பிறப்பு —> 22-01-1974
26-05-1987 <— வீரச்சாவு —> 12-04-1991

மண்ணின் மடியில் உறங்கிக்கொண்டிருக்கும் மாவீரரே!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் இலட்சியம் மறைவதில்லை
இதோ இளையவர்கள் உங்கள் இலட்சியப் பாதையில் பாதம் பதித்து
உங்கள் கனவை நனவாக்க விரைந்து கொண்டிருக்கிறார்கள்
உங்கள் கனவு நனவாகி- சுதந்திர தமிழீழம்
கிடைக்க கடவுளை பிரார்த்தித்து நிற்கின்றோம்.

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்

-குடும்பத்தினர்

உதயசூரியன் வீதி,
[மதவடி]
வல்வெட்டித்துறை.

[சி-9516]



## லெப்டினனட் இறையன்பன் | ஜோன்சன்

**திருச்செல்வம் ரவிச்சந்திரன்**
(1ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

பிறப்பு:
21-6-70

வீரச்சாவு:
30-5-92

திதி 26.5.94

வீரனே எங்கள் விழி நிறைந்தவனே
வீரத்தின் சின்னமாகி விடுதலைக்கு வித்தானாய்
மாவீரர் அடிச்சுவட்டில், அணிதிரளும்
மறவர் கூட்டம்! வென்றிட்டார், தமிழ் ஈழம்
அன்று நிறைந்திடுமே உந்தன் எண்ணம்.

முதலியார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

- குடும்பத்தினர்

(8388)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
1928 - 10 - 11

விண்ணில்
1994 - 04 - 26

**திருமதி சின்னத்துரை மாணிக்கம்**

பாசத்தின் ஊற்றாய் எமையெல்லாம் வளர்த்திட்டு
பாதியிலே எம்மை விட்டுப் பிரிந்தனையோ
காலம்தான் அழைத்தாலும்
காற்றாகிப் போவதற்கு மனம் வந்ததேயம்மா
நினைவிலே நினைக்க முடியாது
நிம்மதியாய்ச் சென்றதேயம்மா உங்கள் பயணம்.

உங்கள் பிரிவால் வாடும்
மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

இணுவில் மேற்கு.
இணுவில்.

(8387)

91/8 இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

[8390]

## கண்ணீர் அஞ்சலி



**செல்வி நிரஞ்சலா இராசநாயகம்**
**(யாழ்- வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவி)**

நிரஞ்சலா............
நீ இங்கு இல்லையம்மா......
உன்
நினைவு—
எமக்குள் வாழுகின்றது
இயமனாகி
நோய் வந்து
உன்னை அழைத்ததோ
அட!
எம் நெஞ்சை
அழவைத்து விட்டாயே!

25-5-94 புதன் அன்று எம்மை ஆழாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயிலில் கிடக்கின்ற நிரஞ்சலாவின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நியூட்டன்
குடும்பத்தினர்

சிவன் வீதி,
உரும்பராய்.

[சி-9521]

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது